### இந்திய மாது விழுந்த பாதாள குழி விவகாரம்

## மஸ்ஜிட் இந்தியா சம்பவத்தில்

# விசாரணை முடிவடைந்தது







கோலாலம்பூர், அக். 15-

கடந்த ஆகஸ்ட் 23 ஆம் தேதி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஏற்பட்ட 8 மீட்டர் ஆழமுடைய பாதாள குழி விவகாரம் தொடர்பான முழு விசாரணை முடிவுகள் முதலில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு

பக்கம் 13

## இந்திய மாது விழுந்த பாதாள குழி விவகாரம்

முதல்பக்கத் தொடர்ச்சி...

அதன் பின்னர் பொது மக்களுக்கு வெளியிடப்படும் என்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார். இந்த விசாரணை அறிக்கை இப்போது இறுதி கட்டத்தில் இருக்கிறது. இந்த முடிவு ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த அந்த சம்பவம் தொடர்பாக எல்லாக் கோணங்களிலும் ஆராயப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு செய்யப்பட்ட ஒரு முடிவாகும் என்றார் அவர். பல்வேறு அரசு நிறுவனங்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. அதே போல டாங் வாங்கி காவல் படைத்தலைவர் கோலாலம்பூர் மாநகர மன்றம் இப்படி பல தரப்பினரும் இந்த விசாரணையில் பங்கேற்றுள்ளனர்.

மேலும் அந்த இடத்தின் மண்ணின் தரம் அங்குள்ள அமைப்பின் நிலை அது ஆபத்தை கொண்டு வருமா என்பது குறித்து பூமியியல் இலாகாவும் மற்றும் அது சம்பந்தப்பட்ட பிரிவுகளும் ஆய்வு செய்துள்ளன என்று நேற்று மக்களவையில் பத்து தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி.பிரபாகரன் எழுப்பிய கேள்விக்கு அவர் பதில் அளித்தார்.

இந்த சம்பவத்திற்கு பின்னர் பொது மக்களிடையே அச்சமும் பதற்றமும் ஏற்பட்டாலும் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதி முழு அளவில் பாதுகாப்பாக இருக்கிறது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 23 ஆம் தேதி அங்கு நடந்து சென்று கொண்டிருந்த இந்தியாவைச் சேர்ந்த ஒரு சுற்றுப்பயணியான விஜயலட்சுமி (வயது 48) திடீரென ஏற்பட்ட பாதாளக் குழியில் விழுந்து காணாமல் போனார்.

இரவும் பகலும் 9 தினங்கள் வரை தொடர்ச்சியாக அவரைத் தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் அது தோல்வியில் முடிந்தது. அங்கு மீண்டும் ஒரு பாதாள குழியும் உருவானது.

எனினும் அந்த இடத்தில் மனிதர்களின் நடவடிக்கையினாலும் மண் அரிப்பினாலும் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது என்பதை இயற்கை வள சுற்றுச்சூழல் அமைச்சு உறுதி செய்தது.